# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**MCOP.No. 178/2021**

**நாள்– 19.03.2025**

**எ.ம.சா.1 திரு.சிவன்பாண்டி** – சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

எனக்கு சொந்தமான மகேந்திரா மேக்சி கேப் வாகனம் 3ம்எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அந்த அசல் காப்பீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்த ஏஜென்டிடம் எவ்வளவு தொகை கொடுத்து என்ன வகையான வாகனத்திற்கு காப்பீடு பெறப்பட்டது என்பது குறித்த ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் காப்பீடு எடுத்த ஏஜென்டின் பெயர், அவர் எங்குள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. அவரை எனது தரப்பு சாட்சியாக விசாரிக்கப்போவதில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ. 1 காப்பீடு ஆவணம் போலியாக உற்பத்திசெய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி காப்பீட்டு எண் உண்மையிலேயே ஒரு இருசக்கர வாகனத்திற்காக வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த காப்பீட்டின் நகல் இந்திய சாட்சிய சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்திலிருந்து மேற்படி அசல் ஆவணத்தை ஆஜர் செய்யுமாறு கொடுத்த அறிவிப்பினை பெற்றுக்கொண்டும் நான் இன்று வரை மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அசல் காப்பீடு என்னிடம் இருந்திருந்தால் அதனை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் எனக்கு வாட்சப் மூலமாக தான் அந்த ஆவணம் அனுப்பிவைக்கப்பட்டது.

3ம் எதிர்மனுதாரர் தரப்பில் போலி காப்பீடு என்ற வாதம் முன்வைக்கப்பட்ட பின்னர் நான் அந்த ஏஜென்டை அணுகி அது குறித்து கேட்டறிந்தேனா என்றால் அந்த நபருடைய கைப்பேசி எண்ணை தொடர்புகொள்ள இயலவில்லை. அந்த

ஏஜென்டின் மீது நான் காவல்துறையிலோ, நீதிமன்றத்திலோ புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான், அந்த விவரம் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த காப்பீடு போலியான காப்பீடு என்பதால் 1, 2 எதிர்மனுதாரர்கள் மட்டும் தான் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றும், 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் போலி காப்பீடு சம்பந்தமாக என் மீது காவல்துறையில் ஒரு புகார் கொடுத்து அதுநிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

நான் தாக்கல் செய்துள்ள போலி காப்பீட்டிற்கும் 3ம் எதிர்மனுதாரருக்கும் சம்பந்தம் கிடையாது என்றும், அது எதிர்மனுதாரரின் நிறுவனத்தால் வழங்கப்பட்டது கிடையாது என்றால் சரியல்ல. அது 3ம் எதிர்மனுதாரரால் வழங்கப்பட்டது என்பதை காட்ட நான் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது ஓட்டுநர், வாகனத்தை நிதானமாக ஓட்டிவந்தார் என்றும், மனுதாரரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டதாக நான் சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன நபர் ஓட்டிவந்த வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தை கட்சி சேர்க்காத காரணத்தினால் அவசிய கட்சியினரை சேர்க்காத தோஷத்தினால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் நிறுவனம் ஏஜென்டுகள் மூலம், ஆன்லைனில் காப்பீடு செய்வது வழக்கம் என்றால் சரிதான். அந்த வகையில் பெறப்பட்டது தான் நான் தாக்கல் செய்த காப்பீடு என்றால் சரிதான். அந்த காப்பீட்டில் தவறு ஏதாவது இருந்தால், அதற்கு 3ம் எதிர்மனுதாரரும் பொறுப்பு ஏற்கவேண்டும் என்று சொன்னால் சரிதான். மனுதாரருக்கு இழப்பீடு வழங்க காப்பீட்டு நிறுவனமான 3ம் எதிர்மனுதாரருக்கு கடமை உள்ளது என்றால் சரிதான். எனது வாகனம் விபத்து காலத்தில் 3ம் எதிர்மனுதாரரின் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் அவர்கள் தான் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi